| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| தண்.வசுந்தராதேவி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி<br>அலுவலர்கள். |

**ந.க.எண். 001799 /எப்1/2019** **நாள் : 31 .01.2019**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு, மார்ச் 2019 – பள்ளி மாணவர்களுக்கான தேர்வுக் கட்டணத்தினை – தலைமையாசிரியர்கள் ஆன்லைன் வழியாக செலுத்துதல் – தேதி அறிவித்தல் – தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தக் கோருதல் – சார்பு.

**பார்வை :**

1. அரசாணை எண் 237, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள் 21.09.2007.
2. அரசாணை (நிலை) எண்.53, பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிந2) துறை, நாள் 09.07.2013.
3. அரசாணை (நிலை) எண்.14, பள்ளிக் கல்வித் (ஜிஇ1)த் துறை, நாள்.29.01.2018.

-----

மார்ச் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதவுள்ள அனைத்து பள்ளி மாணாக்கரிடமிருந்து (தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களைத் தவிர்த்து) தேர்வுக்கட்டணத் தொகையினை கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு பெற்று, கீழ்காணும் அறிவுரைகளை பின்பற்றி ஆன்லைன் வழியாக **06.02.2019** **முதல்** **28.02.2019** வரையிலான நாட்களுக்குள் செலுத்தும்படி, தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு | | | | | |
|---|---|---|---|---|---|
| வ.எண் | மாணவர் வகை | தேர்வுக் கட்டணம் | மதிப்பெண் சான்றிதழ் கட்டணம் | சேவைக் கட்டணம் | மொத்தம் (ஒரு மாணவருக்கு) |
| 1 | செய்முறை கொண்ட பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோர் | ரூ.200/– | ரூ.20/– | ரூ.5/– | ரூ.225/– |
| 2 | செய்முறை இல்லாத பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோர் | ரூ.150/– | ரூ.20/– | ரூ.5/– | ரூ.175/– |

**<u>தேர்வுக் கட்டண விலக்கிற்கு தகுதியானோர்:</u>**

I. பார்வை 1–ல் காணும் அரசாணையின்படி தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு (Tamil Medium) தேர்வெழுதும் அனைத்து பள்ளி மாணாக்கருக்கும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

II. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழி தவிர இதர பயிற்று மொழிகளில் (Other than Tamil Medium) பயிலும் கீழ்க்குறிப்பிட்ட பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களுக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அ) | SC/SCA/ST மற்றும் SC Converts (SS) | பெற்றோருக்கான வருமானத்திற்கு உச்சவரம்பு ஏதும் இல்லை. |
| ஆ) | MBC/DC | |
| இ) | BC/BCM | பார்வை 2–ல் காணும் அரசாணையின்படி பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்திற்கு மிகாமல்) |

III. மாற்றுத் திறனாளிகள், கண்பார்வையற்றோர் மற்றும் கேட்கும்/பேசும் திறனற்றோர்.

<u>முக்கிய குறிப்பு:</u>

தேர்வுக்கட்டண விலக்கிற்கு தகுதியானவர்களில், செய்முறை கொண்ட பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோருக்கு மொத்தக் கட்டணமாக ரூ.225/–ற்கும், செய்முறை இல்லாத பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் ரூ.175/– ற்கும் முழுமையாக விலக்களிக்க வேண்டும்.

**<u>மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ–இந்தியப் பள்ளிகள்:</u>**

மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயின்று +1 மற்றும் +2 பொதுத் தேர்வெழுதும் மாணவர்கள் தேர்வுக் கட்டண விலக்கு பெறத் தகுதியுடையவர்கள் அல்லர்.

**<u>பள்ளிகளுக்கான அறிவுரைகள்:–</u>**

1. தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து, விலக்களிக்கப்பட்டவர்கள் தவிர மற்ற அனைவரிடமிருந்தும் தேர்வுக்கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

2. (i) மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுத தேர்வுக் கட்டணம் செலுத்திய பள்ளி மாணவர்களின் விவரத்தை பிற்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ள பட்டியலின்படி தயாரித்து இறுதியில், தேர்வுக் கட்டண விலக்கிற்கு தகுதியுள்ளோர் தவிர ஏனைய அனைவருக்கும் தேர்வுக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என சான்றொப்பம் தலைமை ஆசிரியரால் தவறாமல் அளிக்கப்பட வேண்டும்.

   (ii) மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுத தேர்வுக் கட்டணம் செலுத்திய பள்ளி மாணவர்கள் மற்றும் அசல் மாற்றுச் சான்றிதழுடன் தேர்வுக் கட்டணம் செலுத்திய பள்ளி இடைநின்றோர் ஆகியோரது விவரத்தை பிற்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ள பட்டியலின்படி தயாரித்து இறுதியில், தேர்வுக் கட்டண விலக்கிற்கு தகுதியுள்ளோர் தவிர ஏனைய அனைவருக்கும் தேர்வுக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என சான்றொப்பம் தலைமை ஆசிரியரால் தவறாமல் அளிக்கப்பட வேண்டும்.

3. தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்குப் பெற தகுதியுடைய மாணவர்களின் பெயரை, தேர்வுக் கட்டண விலக்களிக்கப்பட்டோருக்கான அந்தந்த வகை (SC/SCA/ST/SC Converts (SS) or MBC/DC or BC/BCM) பட்டியலில் சேர்க்க வேண்டும்.

4. தேர்வுக் கட்டண விலக்கிற்கு தகுதியானோர் பட்டியலின் இறுதியில் ‘‘இம்மாணவர்கள் அனைவரும் தேர்வுக் கட்டணம் விலக்கிற்கு தகுதியானவர்கள். எனவே இவர்களிடமிருந்து தேர்வுக் கட்டணம் வசூலிக்கப்படவில்லை’’ என சான்றொப்பம் தலைமையாசிரியர் தவறாமல் அளிக்க வேண்டும்.

5. தேர்வுக் கட்டணம் செலுத்தியோர், தேர்வுக் கட்டண விலக்கு பெற்றோர் ஆகியோரது கூட்டு எண்ணிக்கை, பெயர்ப்பட்டியலில் இடம் பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு சமமாக இருத்தல் வேண்டும்.

மேலும், பார்வை 3-ல் காணும் அரசாணையின்படி மார்ச் 2019, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வின் தேர்வு முடிவுகள் அடங்கிய அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) ஆன்லைன் மூலமாக (dge.tn.gov.in என்ற இணையதளம் வழியாக) பதிவிறக்கம் செய்து கொள்வதற்காக, அனைத்துப் பள்ளிகளும் (எந்த ஒரு பள்ளியும் விலக்கு இல்லாமல்) மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்விற்கு ரூ.300/–ம், மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்விற்கு ரூ.300/– ம், தனித்தனியாக செலுத்த வேண்டும்.

பள்ளி மாணாக்கருக்கான தேர்வுக் கட்டணத்தினை தனியாகவும் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்குரிய கட்டணத்தினை தனியாகவும் ஆன்லைன் வழியாக செலுத்த வேண்டும். Remarks எனும் இடத்தில் செலுத்தப்பட்ட கட்டணம் Examination Fees அல்லது TML Fees என்பதனைக் குறிப்பிட வேண்டும்.

ஆன்லைன் மூலமாக மேற்படி கட்டணங்கள் செலுத்துவது தொடர்பாக ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு கீழ்க்காணும் கைப்பேசி எண்ணை தொடர்பு கொள்ள தலைமையாசிரியர்களுக்கு தெரிவித்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**8012594127**

| | | |
|---|---|---|
| **1** | பள்ளித் தலைமையாசிரியர்கள் தேர்வுக் கட்டணம் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்குரிய (TML) கட்டணம் ஆகியவை செலுத்தியதற்கான Receipt, பூர்த்தி செய்த பிற்சேர்க்கை படிவம் மற்றும் சான்றிதழ் போன்ற விவரங்களை மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகளுக்கான தனித்தனி உறைகளில் இட்டு சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்கும் தேதி | **01.03.2019–க்குள்** |
| **2** | மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் தேர்வுக் கட்டணம் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்குரிய (TML) கட்டணம் ஆகியவை செலுத்தியதற்கான Receipt, பூர்த்தி செய்த பிற்சேர்க்கை படிவம் மற்றும் சான்றிதழ் ஆகியவற்றை மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகளுக்கான தனித்தனி உறைகளில் இட்டு தலைமை அலுவலகத்தில் ஒப்படைக்கும் தேதி | **08.03.2019–க்குள்** |

இவ்வாறு தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களையும், மார்ச் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான தேர்வுக் கட்டணம் மற்றும் அட்டவணைப் படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்கான (TML) கட்டணத்தினை ஆன்லைன் மூலமாக செலுத்திட கண்டிப்பாக அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு:**

1. ஆன்லைனில் பள்ளித் தேர்வுக்கட்டணம் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்கான கட்டணம் செலுத்துவதற்கான வழிமுறைகள்.
2. பிற்சேர்க்கை படிவம்.

ஒம்/–
**இயக்குநர்**

**நகல்**

1. இயக்குநர்,
   பள்ளிக்கல்வி இயக்ககம்,
   சென்னை – 6
2. இயக்குநர்,
   மெட்ரிக் பள்ளிகள் இயக்ககம்,
   சென்னை – 6
3. அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்
   – சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் வழியாக.
4. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
   – தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும்
5. எச்1 மற்றும் எ4 பிரிவுகள் (அலுவலகம்) – தொடர் நடவடிக்கைக்காக.

**<u>ஆன்லைனில் பள்ளித் தேர்வுக்கட்டணம் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்கான கட்டணம் செலுத்துவதற்கான வழிமுறைகள்</u>**

www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் **Online Portal–ஐ "Click" செய்து தோன்றும் பக்கத்தில் Higher Sec March 2019 என்ற தலைப்பின் கீழ் உள்ள Video Clipping - Online Payment procedure for Hr Sec Examination fees & TML fees–ஐ click செய்து** பள்ளித் தேர்வுக்கட்டணம் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்கான கட்டணம்செலுத்துவதற்கான வழிமுறைகள் தொடர்பான வீடியோவைப் பார்த்து அதில் காண்பிக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி, மேற்படி கட்டணங்களை ஆன்லைனில் செலுத்தவேண்டும்.

ஆன்லைனில் தேர்வுக் கட்டணம் செலுத்திய பிறகு, Remarks என்ற பகுதியில் மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதும் பள்ளி மாணாக்கர்களின் மொத்த எண்ணிக்கை, தேர்வுக் கட்டணம் செலுத்திய மாணாக்கர்களின் எண்ணிக்கை மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட மாணாக்கர்களின் எண்ணிக்கை ஆகிய விவரங்களை தெளிவாகக் குறிப்பிடப்படவேண்டும்.

மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பயிலும் பள்ளி மாணாக்கருக்கான தேர்வுக் கட்டணத்தினை தனித்தனியாகவும் மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகளுக்கான அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியல்களுக்கான கட்டணத்தினை தனித்தனியாகவும் ஆன்லைன் வழியாக செலுத்த வேண்டும். **Remarks** எனும் இடத்தில் செலுத்தப்பட்ட கட்டணம் **Examination Fees அல்லது TML Fees** என்பதனைக் குறிப்பிட வேண்டும்.

ஆன்லைனில் தேர்வுக் கட்டணம் மற்றும் TML கட்டணம் செலுத்திய பிறகு, ரசீதை பதிவிறக்கம் செய்துக் கொள்ள வேண்டும். மீளவும் ரசீதை பதிவிறக்கம் செய்ய நேரிடும் பட்சத்தில், ஆன்லைன் தேர்வுக் கட்டணம் மற்றும் TML கட்டணம் செலுத்தும்போது பதிவு செய்யும் பிறந்த தேதி மற்றும் கைப்பேசி எண் (Mobile No) ஆகியவையே, மீளவும் பயன்படுத்தி பணம் செலுத்தியதற்கான ரசீதை (Receipt) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். எனவே தலைமையாசிரியரின் பிறந்த தேதி மற்றும் கைப்பேசி (Mobile No) எண்ணையே மேற்படி வழிமுறைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

**<u>e-receipt -ஐ மீளவும் Print எடுப்பதற்கான வழிமுறைகள்:</u>**

www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் **Online Portal–ஐ "Click" செய்து தோன்றும் பக்கத்தில் Higher Sec March 2019 என்ற தலைப்பின் கீழ் உள்ள Procedure for reprint e-receipt –ல்** பள்ளித் தேர்வுக்கட்டணம் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்கான கட்டணம் செலுத்தியதற்கான ரசீதை **(e-receipt)** மீளவும் **Reprint** எடுக்கும் வழிமுறைகள் தொடர்பான வீடியோவைப் பார்த்து அதில் காண்பிக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி, மேற்படி **e-receipt–ஐ Print** எடுத்துக்கொள்ளலாம்.

# <u>பிற்சேர்க்கை</u>

கல்வி மாவட்டத்தின் பெயர்

| பள்ளி எண் | பள்ளியின் பெயர் | தேர்வுக் கட்டணத் தொகை வசூலிக்கப்பட்ட தேர்வர்களின் எண்ணிக்கை | தேர்வுக் கட்டணத் தொகை | | மொத்த தேர்வுக் கட்டணத் தொகை | அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்கான தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | செய்முறை உள்ள பாடத் தொகுப்பு | செய்முறை இல்லாத பாடத் தொகுப்பு | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | மொத்தம் | | | | | |

அலுவலரின் கையொப்பம்

(அலுவலக முத்திரையுடன்)